சார்பு நீதிமன்றம், மேலூர்
OS No.315/2021

பெயர் : ஞானசக்தி
தகப்பனார் பெயர் :சந்தோஷ்உத்தமன்
கணவர் பெயர் :
வயது :47
கிராமம் :அட்டப்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

05.02.2026

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 12.09.1990 தேதியிட்ட கிரைய பத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.3. 15.09.2020 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் வா.சா.ஆ.4. பட்டா எண்.2260, அட்டபட்டி கிராமம் சர்வே எண்.224/1B வா.சா.ஆ.5. பட்டா எண்.2287, அட்டப்பட்டி கிராமம் சர்வே எண்.222/1B வா.சா.ஆ.6. பட்டா எண்.2282, அட்டப்பட்டி கிராமம் சர்வே எண்.224/3B வா.சா.ஆ.7. அரசு வழிகாட்டுதல் மதிப்பீடு வா.சா.ஆ.8. நான் கீழவளவு காவல்துறை ஆய்வாளர் அவர்களுக்கு கடந்த 04.01.22 அன்று கொடுத்துள்ள புகார் ஒளிநகல் வா.சா.ஆ.9. 02.04.2008 தேதியிட்ட ஷீலா அவர்களுக்கு சக்திமோகன் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.10. 04.08.2010 தேதியிட்ட உமா அவர்களுக்கு சக்திமோகன் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.11. 27.11.2019 தேதியிட்ட உமா அவர்களுக்கு சக்திமோகன் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.12. கீழவளவு காவல்நிலையத்தார் கொடுத்துள்ள புகார் மனு ஏற்பு ரசீது

வா.சா.ஆ.13. மேலும் என்னுடையதரப்பு ஆவணங்களாக 04.01.2005 தேதியிட்ட நடராஜன் S/o சண்முகதேவர் என்பவருக்கு சக்திமோகன் கொடுத்துள்ள சம்மத பத்திரம் நகல் வா.சா.ஆ.14. 27.07.2020 தேதியிட்ட கிருஷ்ணன் என்பவருக்கு சந்தோஷ் உத்தமன் S/o சக்திவேல் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.15.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.02.05 20:35:39 +0530

Sub Judge

Melur